# <u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2020-ம் ஆண்டு விளம்பி வருடம் நவம்பர் மாதம் **27.11.2020–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 255 / 2020</u>**

காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் கடித ந.க.எண். 3534 / 2019 / அ6, நாள். 09.11.2020–ல் திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், வெள்ளகோவில் உள்வட்டம் வெள்ளகோவில் கிராமம் நத்தம் புல எண். 1904 / 1 (பழைய புல எண். 371/ஏ1) மனுதாரர்கள் அனைத்திலும் உள்ள 1733 சதுர அடி புலத்தில் 1) திருமதி. தனலட்சுமி, க/பெ. ரங்கசாமி (லேட்), 2) திரு. சேகர், த/பெ. பார்த்தசாரதி, 3) பீரித்தி, த/பெ.சேகர், 4) தருண், த/பெ. சேகர், 5) திருமதி. சித்ரா, க/பெ. ஆனந்தன், 6) திருமதி. நிர்மலா, க/பெ. லட்சுமணசாமி ஆகிய 6 நபர்களுக்கு நத்தம் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு, ஆட்சேபனை இருப்பின் காங்கயம் வட்டாட்சியருக்குத் தெரிவிக்குமாறும், ஆட்சேபனை இல்லையெனில் பட்டா வழங்குவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றி வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வட்டாட்சியர், காங்கயம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட 6 நபர்களுக்கும் நத்தம் பட்டா வழங்க நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என மன்றம் அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1360 / 2020 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 256 / 2020</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வீரக்குமார் கட்டண கழிப்பிட குத்தகைதாரர் திரு. செ. ஆறுமுகம், த/பெ. சென்னி என்பவர் கடந்த 29.10.2020–ல் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். இந்நிலையில் அன்னாரின் மனைவி திருமதி. மீனா, க/பெ. ஆறுமுகம் எனபவரின் 30.10.2020 தேதிய விண்ணப்பத்தில் தனது குடும்பம் கணவரை இழந்த நிலையில் வறுமையில் உள்ளதாகவும், இதனால் குத்தகை தொகையை செலுத்த முடியாவண்ணம் உள்ளதாலும், குத்தகையை தொடர்ந்து நடத்து முடியாமல் உள்ளதாலும், 30.10.2020 முதல் திரும்ப ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குத்தகை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் குத்தகை உரிமம் வழங்கிய உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி குத்தகைதாரர் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவதற்கு முன்பு குத்தகை திரும்ப ஒப்படைக்க இயலாது. எனவே மேற்படி குத்தகைதாரர் வாரிசான திருமதி. மீனா என்பவரின் விண்ணப்பதின் பேரில் வீரக்குமார் நகர் கட்டண கழிப்பிடம் துறை ரீதியான வசூல் செய்யவும், மேற்படி குத்தகை ஏலம் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்கண்ட வீரக்குமார் நகர் கட்டணக் கழிப்பிடத்திற்கு குத்தகை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், குத்தகை முடிவு செய்யும் வரை துறை ரீதியான வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1708 / 2019 / அ3 )

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 257 / 2020</u>**

இந்நகராட்சி பேருந்து நிலைய நுழைவு கட்டண வசூல் செய்யும் குத்தகைதாரர் திரு. மாரியப்பன், என்பவரின் 13.11.2020–ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் குத்தகை உரிமம் வசூலிப்பதில் 25.03.2020 முதல் கொரோனா நோய் தொற்று காரணமாக மத்திய, மாநில அரசுகள் ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டதால் பேருந்துகள் இயங்காமல் இருந்ததால் பேருந்து நுழைவு கட்டணம் வசூலாகவில்லை. எனவே தனக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் தொடர்ந்து இரண்டாமாண்டு (06.12.2020 முதல்) மற்றும் மூன்றாமாண்டு குத்தகையை நடத்த இயலாது என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குத்தகை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் குத்தகை உரிமம் வழங்கிய உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி குத்தகைதாரர் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவதற்கு முன்பு குத்தகை திரும்ப ஒப்படைக்க இயலாது. அவ்வாறு ஒப்படைத்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குத்தகைதாரர் விண்ணப்பதின் பேரில் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் **06.12.2020** முதல் துறை ரீதியான வசூல் செய்யவும், மேற்படி பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்திற்கு ஏலம் கோரவும், குத்தகைதாரரின் வைப்புத்தொகை பறிமுதல் செய்து பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்கண்ட பேருந்து நிலைய நுழைவு கட்டணக் குத்தகைக்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை பறிமுதல் செய்து பொது நிதிக்கு மாற்றம் செய்யவும், பேருந்து நிலைய நுழைவு கட்டண குத்தகை உரிமத்தை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், குத்தகை முடிவு செய்யும் வரை துறை ரீதியான வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1708 / 20219 /அ3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 258 / 2020</u>**

இந்நகராட்சி பேருந்து நிலைய கடை எண்.03 குத்தகைதாரர் திரு. ராம், த/பெ. சுப்பிரமணி என்பவரின் 23.11.2020–ம் தேதிய விண்ணபத்தில் தன்னால் மேற்படி கடையை நடத்த முடியாமல் தங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க இருந்த நிலையில் 25.03.2020–ல் தமிழக அரசு ஊரடங்கு சட்டம் பிறப்பித்த காரணத்தால் கடையை அடைக்க தெரிவித்ததில் நான் என் கடையை அடைத்துவிட்டு சொந்த ஊருக்கு சென்றுவிட்டேன். மீண்டும் கடையை திறப்பதற்கு பேருந்து போக்குவரத்து இல்லாத காரணத்தினால் மேற்படி கடையை திறக்க இயலவில்லை. தற்போது பத்து நாட்களாகதான் பேருந்து போக்குவரத்து துவங்கிய நிலையில் எனக்கு மேற்படி கடை தேவைப்படாத காரணத்தினாலும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் நகராட்சிக்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை. எனவே மேற்படி (கடை எண்.03) குத்தகையை 25.03.2020 முதல் திரும்ப ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குத்தகை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் குத்தகை உரிமம் வழங்கிய உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி குத்தகைதாரர் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவதற்கு முன்பு குத்தகை திரும்ப ஒப்படைக்க இயலாது. அவ்வாறு ஒப்படைத்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

எனவே குத்தகைதாரர் விண்ணபதின் பேரில் பேருந்து நிலைய கடை எண். 03–க்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், வைப்புத்தொகை பறிமுதல் செய்து பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்கண்ட கடைக்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை பறிமுதல் செய்து பொது நிதிக்கு மாற்றம் செய்யவும், கடை எண். **3**–க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2019 / அ3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 259 / 2020</u>**

இந்நகராட்சி ஆடுவதை சாலைக்கான குத்தகை காலம் 31.12.2020–ல் முடிவடைவதாலும், வீரக்குமார் நகர் கட்டணக் கழிப்பிட குத்தகைதாரர் 29.12.2020–ல் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுதாரர் குத்தகை தொடர்ந்து நடத்த இயலாத என தெரிவித்ததால், மேற்படி இரண்டு குத்தகைகளுக்கும் 26.11.2020–ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் தினசரி நாளிதழில் வெளியிட கோரி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் கடிதம் வெளியீட்டு ஆணை எண். 723 / 2020, நாள். 10.11.2020–ன்படி தினத்தந்தி தினசரி நாளிதழ் திருப்பூர் பதிப்பு நாள். 11.11.2020–ல் பக்கம் எண். 7–ல் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் எண். TPR2021-0009013,

நாள். 11.11.2020–ன்படி பட்டியல் தொகை ரூ. 8505 /- The Daily thanthi நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2020 / அ3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 260 / 2020**

இந்நகராட்சிக்குட்பட்ட 13–வது வார்டு தண்ணீர்பந்தல் பகுதியல் சுமார் 56 அருந்ததியர் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். மேற்படி பகுதியில் போதுமான குடிநீர் வசதியில்லை என்பதால், அப்பகுதி பொதுமக்கள் மெயின் ரோடு கடந்து சென்று குடிநீர் கொண்டுவர சிரமமாக உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பகுதியில் பொதுக்குழாய் அமைக்க தாராபுரம் ரோடு பகுதியில் மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 4/8 – 5/0 பகுதியில் தார்சாலையை குறுக்காக வெட்டி குழாய் அமைக்க வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 90,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 261 / 2020**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண். 281 / 2020 / அ3, நாள். 23.11.2020–ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி இளநிலை உதவியாளர் பி. ரமேஷ் மற்றும் வருவாய் உதவியாளர் கு. கோபி ஆகியோர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறும் இளநிலை / வருவாய் உதவியாளர்களுக்கான (Comprehensive Training course – Batch-II) விரிவாக்கப் பயிற்சி 30.11.2020 முதல் 24.12.2020 வரையான காலத்தில் கலந்து கொள்ளவும், மேற்படி பயிற்சி காலத்தில் உணவு மற்றும் இருப்பிட செலவிற்கான (ரூ. 1000 x 20 x 2 = 40000) கட்டணம் ரூ. 40000 /–ஐ நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1319 / 2020 / சி1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 262 / 2020**

வெள்ளகோவில் நகராட்சிப் பகுதியில் 2019–20–ம் ஆண்டு நடைபெற்ற / நடைபெறும் பணிகள் விபரத்தினை அரசு விதிகளுக்கு உட்பட்டு விளம்பரம் வெளியிட மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதன்பேரில் கீழ்காணும் தமிழ் நாளிதழ்களுக்கு விளம்பரம் வெளியிட்டமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினகரன் நாளிதழ் | பில் நெம். 3300247388, நாள். 25.10.2020 | 9975.00 |
| 2 | தினத்தந்தி நாளிதழ் | TPR2021-0007701, நாள். 23.10.2020 | 15120.00 |
| 3 | தினமலர் நாளிதழ் | AE – 20505858, நாள். 25.10.2020 | 31500.00 |
| 4 | தினமணி நாளிதழ் | CBETN40055100A, நாள். 25.10.2020 | 21000.00 |

மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு காசோலை மூலம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண். 970 / 2020 /இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 263 / 2020**

நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் (NH67) மத்திய அரசின் திட்டத்தின்கீழ் சேனாபதிபாளையம் கி.மீ. 255 / 650 முதல் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் கி.மீ. 259/250 வரை சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெறுவதால், பழைய பேருந்து நிலையம் மற்றும் கல்கி ஸ்நேக் கார்னர் பகுதியில் உள்ள உயர்மின்விளக்கு கோபுரங்களை அகற்றித் தருமாறு காங்கயம் தேசிய நெடுஞ்சாலைத் துறை உதவிப்பொறியாளர் கடிதம் மூலம் (க.எண். 7/EPC/2020321 / உ.பொ. / உயர்மின்விளக்கு கம்பம், நாள். 03.11.2020) கேட்டுக் கொண்டுள்ளார். எனவே மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதியில் உள்ள உயர்மின்கோபுர விளக்குகளை மாற்றியமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது.

1) பழைய பேருந்து நிலையம் வளாகம் - 20 மீட்டர்
2) கல்கி கார்னர் வளைவில் - 16 மீட்டர்
3) தேவர் பூக்கடை அருகில் – 9 மீட்டர்
4) பழைய பேருந்து நிலைய வளாகம் - 9 மீட்டர்

எனவே மேற்படி உயர்மின்கோபுர விளக்குகளை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1306 / 2020 / இ1 )

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 264 / 2020**

இந்நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ள கோவை ரோடு கன்னிகாபேக்கரி அருகில் ஆழ்குழாய் கிணறு அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறுவதால், இந்த ஆழ்குழாய் கிணற்றை சுற்றி ஒரு கான்கீரிட் தொட்டி அமைக்க வேண்டியுள்ளது. இதேபோல் டி.சி.ரோடு மேற்கு சாமிநாதன் வீடருகில் கல்லாங்காட்டுவலசு ஆகிய இடங்களில் நகராட்சி சாலைப்பணிகள் நடைபெறுவதால், இந்த சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளை சுற்றி தொட்டிகள் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் தாராபுரம் ரோடு அரசு மருத்துவமனை அருகில் கேட்வால்வு தொட்டிகள் மாநில நெடுஞ்சாலை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குள் வருவதால், போக்குவரத்து பாதிக்காமலும், விபத்துகள் ஏற்படாமலும் இருக்கும் பொருட்டு இந்த தொட்டிகளின் மேல் கான்கீரிட் மூடிகள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மிகவும் அத்தியாவசியமான பணிகளாகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,20,000 /-க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

2.3.21

**ஆணையாளர் /**
**தனி அலுவலர்**
**வெள்ளகோவில் நகராட்சி**

02.03.21